**CC**.**No**.168/2024

**Date**: 13.05.2026

ம.சா. 1 வேலாயுதம், த/பெ காளிமுத்து, காரைக்குடி.

**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**குறுக்கு விசாரணை**

**1) நான் வருமானவரி தாக்கல் செய்கிறேனா என்றால் இல்லை. வருமான வரி செலுத்துவதற்கு எனக்கு போதிய வருமானம் இல்லை என்பதால் நான் வருமான வரி செலுத்தவில்லை என்றால் சரிதான். வருடத்திற்கு ரூ.2 லட்சத்திற்கு மேல் வருமான இருந்தால் வருமான வரி தாக்கல் செய்யவேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். கணேசபுரத்தில் கோழிக்கடை வைத்திருக்கும் சந்திரனை எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் அவரை எனக்கு தெரியாது. காரைக்குடியில் பைனான்ஸ் செய்யும் கார்மேககண்ணன் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. எதிரி கடன் வாங்கியகதாக கூறும் தேதியில் எதிரி ஆவணங்கள் கொடுத்தாக கூறியுள்ளேனா என்றால் இல்லை, எதிரி ஆவணங்கள் எதுவும் கொடுக்கவில்லை. எதிரிக்கு கொடுத்ததாக கூறப்படும் தொகை நான் எவ்வாறு பெற்றிருந்தேன் என்பதை வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.**

**2) கடன் கொடுத்தாக சொல்லப்படும் தொகை யாருக்கு தெரியும் என்ற விபரத்தை புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், எனது மனைவி முன்னிலையில் கொடுத்தேன். வேறு நபர்களுக்கு தெரியுமா என்றால் எனது தங்கைக்கு தெரியும். எனது மனைவி மற்றும் எனது சகோதரியை நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்க தயாரா என்றால் தயாராக இருக்கிறேன். எதிரிக்கு கொடுத்ததாக கூறப்படும் நகை நான் வாங்கிய பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நகைகளின் மாடல் புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நகைகள் எதிரியுடையது என்றாலும், எதிரி அதை முததூட் பைனான்சில் அடகு வைத்திருந்த விபரம் கார்மேககண்ணன் என்பவருக்கு தெரியும் என்றாலும் அதை நான் கூறுகிறேன் என்றால் சரியல்ல. நகைகள் எனது நகைகள் ஆகும். மோதிரம் –4 ( பெண்கள் அணிவது) , 2 பவுன் செயின் 1– டாலர் ஆகும்.**

3) நகைகள் எதிரியின் பெயரில் முத்தூட் பைனான்சில் வைக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நகைகளின் மாடல் மற்றும் எடை குறிப்பிட்டு எதிரிக்கு கொடுக்கப்பட்டதற்கு ஏதேனும் ஆவணம் எழுதி பெற்றேனா என்றால் இல்லை. எதிரி எதற்காக கடன் பெற்றார் என்று கூறியுள்ளேன் என்றால் எதிரியின் வீடு சோழமண்டலம் பைனான்சில் அடமானம் வைத்து ஜப்தி செய்வதாக கூறி கடன் பெற்றார். ஏற்கனவே கடன் பெற்று ஜப்தி செய்யும் அளவிற்கு சென்றபின்பும் எதிரிக்கு எந்த ஒரு ஆவணமும் இல்லாமல் கடன் கொடுத்ததாக சொல்வது நம்பும்படி இல்லை என்றால் சரியல்ல. நம்பிக்கையின் பேரில் கடன் கொடுத்தேன். எதிரியின் மகன் ஜெஸ்டின் நெப்போலியன் என்னுடன் சேர்ந்து சிங்கப்பூரில் 10 வருடம் வேலை பார்த்தோம், மற்றும் வீடு ஜப்தி செய்வதாக கூறியதால் கொடுத்தேன். சிங்கப்பூரில் 10 வருடங்கள் சேர்ந்து பணிபார்த்தோம் மற்றும் அந்த நம்பிக்கையில் பணம் கொடுத்தேன் என்று புகாரில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். சிங்கப்பூரில் 10 வருடங்கள் சேர்ந்து பணிபார்த்தோம் மற்றும் அந்த நம்பிக்கையில் பணம் கொடுத்தேன் என்பது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4) பணம் கொடுத்தற்கு ஏதாவது பத்திரம் எழுதிக்கேட்டானா என்றால் இல்லை. எந்த தேதியில் பணம் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் 03.11.2023. எப்போது திருப்பி தருவதாக கூறியிந்தார் என்றால் 10.05.2024 –ல் திருப்பி தருவதாக கூறினார். 10.05.2024 –ல் எந்த ஆவணமும் எதிரி கொடுத்தாரா என்றால் காசோலை மட்டும் நிரப்பி கொடுத்தார். கடன் கொடுத்ததாக கூறப்படும் 03.11.2023 ல் ரூ.15,70,000/– தொகை கொடுப்பதற்கு எனக்கு போதிய பொருளாதார வசதி இருந்ததில்லை என்றாலும் சரியல்ல, நான் என் தங்கை சேர்ந்து பணம் கொடுத்தோம். தங்கையின் பணமும் சேர்ந்து கொடுக்கப்பட்டது என்பதை சட்ட அறிவிப்பில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது மற்றும் சகோதரியின் பணத்தை சேர்த்து 03.11.2023 ல் கொடுத்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றாலும் எதிரிக்கும் எனக்கும் எந்தவொரு வரவு செலவும் இல்லை என்றாலும் சரியல்ல.

5) கடந்த 2022ல் கார்மேககண்ணனிடம் இருந்து எதிரியின் மகன் ஜெஸ்டின் நெப்போலியன் ரூ. 6 லட்சம் கடனாக பெற்று அதற்கு செக்யூரிட்டிக்காக நிரப்பாத வழக்கு காசோலையையும், எதிரியின் மகனுக்கு சொந்தமான HDFC காசோலை 000031 ஆகிய இரண்டையும் பூர்த்தி செய்யாமல் கார்மேககண்ணனிடம் கொடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கார்மேககண்ணனிடம் பெற்ற கடனை எதிரியின் மகன் நெப்போலியன் அவர் கணக்கு வைத்துள்ள HDFC வங்கி G-pay மூலமாக பல்வேறு தவணைகளில் கொடுத்து 2023ல் கடனை திருப்பி செலுத்தியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வங்கி மூலமாக கார்மேககண்ணனுக்கு கடனை திருப்பி செலுத்தியதால் கோழிக்கடை வைத்துள்ள சந்திரன் என்பவர் மூலமாக கார்மேககண்ணன் எதிரியின் செக்யூரிட்டி காசோலையை என் மூலமாக பயன்படுத்தி தற்போதைய வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதற்கும் தற்போதைய வழக்கிற்கும் சம்பந்தம்இல்லை. எதிரி நகைகளை என்னிடம் இருந்து பெற்றதற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

6) மா.சா.ஆ.1 வழக்கு காசோலையின் எதிரியின் கையொப்பம் மற்றும் நிரப்பியுள்ள விபரங்கள் வேறு வேறு மைகளால் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு காசோலைக்கு எந்த ஒரு மறுபயனும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் வழக்கில் குறிப்பிட்டு எந்த ஒரு கடனும், நகையையும் பெறவில்லை என்றால் சரியல்ல. மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் படி தற்போதைய வழக்கை நான் செய்யவில்லை என்றாலும், வழக்கை தள்ளுபடி செய்து, எதிரி குற்றமற்றவர் என்று தீர்ப்பளிக்க வேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.05.13 15:13:14 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.